MALAR 4 | ITHAZH 4

# TGC TIMES

## Tamil Gospel Church Monthly Newsletter

For details about TGC Contact **Pastor. Joseph** 240 437 8545

**SUNDAY SERVICE**
**5.00 PM**
Worshipping at
**142B Sand Hills road,**
**Monmouth Jn NJ 08852**
**www.tamilgospelchurch.org**



## IN THIS ISSUE


Kids' Corner 2
Announcements 2
Birthdays/Anniversaries 3
Ministry Updates 4




## *"உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (Thy will be done)*

இந்த புதிய மாதத்திலும் செய்தி மடல் மூலமாகச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பல இடங்களில் ஜெபித்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். இங்கு மத்தேயு 26: 36 - 46 வசனங்களில் மூன்று முறை ஒரே வார்த்தைகளைக் கூறி ஜெபிப்பதைப் பார்க்கிறோம். "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" இந்த ஜெபத்தில் பிதாவே என்னுடைய முழு வாழ்க்கையும் உம்முடைய சித்தம் செய்ய ஒப்புக்கொடுக்கிறேன் என்று இயேசுகிறிஸ்து ஜெபிப்பதைக் காண்கிறோம்.இது ஒரு ஆயத்த ஜெபமாகும். சீஷர்களையும் ஜெபிக்கச் சொன்னார்.அவர்களோ, தூங்கி விட்டார்கள். அவர்களிடம் தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் முன்பே கூறியிருந்தும் ஜெபித்து தங்களை ஆயத்தப்படுத்த வேண்டிய தருணத்தை தவற விட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து, தனிமையாகச் சென்று இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். இரண்டாந்தரம்.. இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய ...நீங்கக்கூடாதாகில் , " உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினார். மூன்றாம் முறையும் அந்த வார்த்தைகளைச் சொல்லி ஜெபம்பண்ணினார்.

அன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும் எல்லா நேரமும், எல்லா சூழ்நிலைகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை. எல்லாவற்றையும் சந்திக்க நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

CONTINUED ON PAGE 6

Tamil Gospel Church is a nonprofit religious corporation organized exclusively for religious purposes and served mostly by volunteers of their time and service.
If you have any questions about this Newsletter, please contact membership@tamilgospelchurch.org.
















## KIDS' CORNER - THE STORY OF ABRAHAM AND ISAAC




TO BE CONTINUED

# HAPPY BIRTHDAY

| | |
|---|---|
| Kezia Edward | 1-Apr |
| Jerome Rajan | 1-Apr |
| Danlet Robert | 2-Apr |
| Anthony Rani | 2-Apr |
| Enoch Anbu | 3-Apr |
| Anu Jefferson | 3-Apr |
| Joash Kingston | 4-Apr |
| Rujul | 5-Apr |
| Giritharan Abraham | 6-Apr |
| Jeyahar Vijesh | 6-Apr |
| Dhyahar Vijesh | 6-Apr |
| Harini Ravisankar | 7-Apr |
| Nikhil Santhosh | 9-Apr |
| Dorathy Talia | 10-Apr |
| Sharlin Sangeetha | 11-Apr |
| Kavitha Nirmal | 12-Apr |
| Enoch Anand | 15-Apr |
| Aravin Chand | 16-Apr |
| Albert S Robertcecil | 17-Apr |
| Samuel John | 17-Apr |
| Jancy Ruban | 18-Apr |
| Ramesh Prabu | 20-Apr |
| Jesudasan Kanagaraj | 21-Apr |
| Ethan Solomon | 21-Apr |
| Brigilin Stanley | 21-Apr |
| Jerrell Gipson | 22-Apr |
| Joshua Devasagayaraj | 23-Apr |
| Malar Gipson | 23-Apr |
| Sarah Amirtharaj | 24-Apr |
| Gipson George | 25-Apr |
| Sam Rose Rose | 25-Apr |
| Mervyn Jonathan Abraham | 25-Apr |
| Sahana Premkumar | 26-Apr |
| Jayden David | 26-Apr |
| Samuel Masilkodi | 27-Apr |
| Kennedy Daniel | 27-Apr |
| Johan John | 28-Apr |
| Preethi Santhosh | 28-Apr |
| Elizabeth Ravichandran | 28-Apr |
| Aiden Albert | 29-Apr |
| Ethan Evander Vedaraj | 30-Apr |
| Mabel Rajathi Quilinol Narayanan | 30-Apr |

# WEDDING ANNIVERSARIES

| | |
|---|---|
| Nirmal & Kavitha Nirmal | 16-Apr |
| Brigilin Stanley & Minu Brigilin | 22-Apr |
| Joe Patrick & Anitha Joe | 24-Apr |
| Gipson George & Malar Gipson | 26-Apr |
| Selvin David & Jacqulin David | 27-Apr |

## JUNIOR BIBLE QUIZ (JBQ)

2019 JBQ - District Finals for both Master and Achiever Level happened at Calvary Temple International, Wayne, NJ on Saturday, February 23rd 2019.

At the Master Level, out of 11 teams our team ‘Knights 4 Christ – Faith’ came in 3rd Place and selected for North East Regional. And the second team ‘Knights 4 Christ – Salvation’ came in 6th place.

At the Achiever level team ‘Knights 4 Christ – Grace’ came in 5th place.

All Glory to God. Congratulations to our kids.

Please keep these kids and the ministry in your prayers.

– Rajasingh







## TEEN BIBLE QUIZ (TBQ)

TBQ District Finals took place on Saturday, March 30th 2019. Our team Knights for Christ – Redemption won the Middle School League District and South League Season Championship.

All Glory to God. Congratulations to kids.

– Rajasingh

பவுல் எபேசியர் 6:13 &15ல் சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆயத்தம் என்னும் பாதரட்சயைக் கால்களிலே தொடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறுவதைக் காண்கின்றோம். இந்த ஆயத்தம் நம்முடைய திறமையோ, பரிசுத்தமோ, பக்தியோஅல்ல; இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே. (2கொரி.5:4) இயேசுகிறிஸ்து மனிதனாக பூமியில் ஜீவித்தாலும் தான் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருந்தார். அவர் ஞானஸ்நானம் பெற்ற பின்னர் ஆவியானவராலே, வனாத்திரத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்; நாற்பதுநாள் ஜெபித்தார். பிசாசை வென்றார்.சீஷர்களிடம் பஸ்காவை ஆயத்தப்படுத்த சொல்லி தம்முடைய பாடு, மரணத்தை தெரியப்படுத்தினார்.

ஸ்தோத்திரப்பாட்டைப்பாடி, ஒலிவமலைக்கு ஜெபிக்க சீஷர்களுடன் சென்றார். தன்னுடைய ஊழியத்திலும் எல்லா அற்புதங்கள் செய்யும் முன்பு, இராமுழுவதும் ஜெபித்து விட்டு செல்வதை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். சீஷர்கள் ஜெபிக்க கற்றுத்தர வேண்டும் என்று கேட்ட போது, அதில் ஒரு பகுதியாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று ஜெபிக்க கற்றுக் கொடுப்பதைப் பார்க்கின்றோம். மலை பிரசங்கத்திலும், பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் … (மத்தேயு 7:21) இங்கு பிதாவின் சித்தம் செய்வதே முக்கியப் போதனையாகக் கூறியுள்ளார். நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் தேவனுடைய சித்தம் செய்ய ஜெபிக்கவேண்டும்.

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதை கொள்ளையாடினப் பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலி.2:6 & 7) நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன் …. மகிழ்ந்து கொண்டிருந்தேன். (நீதி.8: 30 & 31)

என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34) பரலோகத்திலிருந்து பிதாவின் சித்தம் செய்யவே வந்தேன் என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம். மத்தேயு 8ஆம் அதிகாரத்தில் குஷ்டரோகி ஒருவன் வந்து ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடும் என்றான். அவனுக்கு காலமெல்லாம் வேதனை, நிந்தனை ஆனாலும் இம்மட்டும் என்னை வழி நடத்தினவர் இனிமேலும் அவருடைய சித்தத்தின்படி தன்னை நடத்துவார் என்பதை அறிந்திருந்தான். இயேசு அவனை சுகமாக்கினார். நாமும்,நம்முடைய எண்ணத்தின்படி ஜீவிக்க அல்ல. அவருடைய சித்தத்தின்படி செய்ய நம்மை முழுவதும் ஒப்புவிக்க வேண்டும். அவருடைய சித்தத்தில் ஒரு Step விலகினாலும் All God's plan will be spoiled in our life. So, whenever we pray "Thy will be done" என்று ஜெபிக்கவேண்டும். அவர் எப்போதும் பிதாவின் சித்தம் செய்து வந்ததால், பிதாவானவர் எப்போதும் அவருடன் இருந்து, அவர் ஜெபிக்கும்போது

1. வானத்திலிருந்து தூதன் தோன்றி பெலப்படுத்தினான்.(லூக்கா 23 :43)
2. உலகத்தில் அநேக முகங்கள் மறைக்கப்பட்டபோதும், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. (யோவான் 12: 27 & 28)
3. இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். அவருடைய நாமத்தினால் நாம் எதையும் இன்று பெற்றுக்கொள்ளமுடியும் (பிலி.2 : 9 & 10)

இந்த லெந்து நாட்களில் நம்மை தேவனிடத்தில் அவருடைய சித்தத்தின்படி செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தரின் ஆசீர்வாதம் நமக்கு உண்டாயிருப்பதாக.

- Pastor K.S.S. Joseph

## JOIN US IN THE CHURCH CONFERENCE PRAYERS

| Sunday Preparatory Prayer | Men's Fellowship Prayer | Women's Fellowship Prayer | P&W Preparatory Prayer |
|---|---|---|---|
| Every Saturday | Every Wednesday | 1st of Every Month | Every Thursday |
| at 9:00 PM | at 9:30 PM | at 9:00 PM | at 9:30 PM |
| 641-715-3294 | 401-283-5650 | 641-715-328 | 641-715-3294 |
| 197264# | 56532# | 671733# | 197264# |